# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2016.03.08 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
# (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகமானது (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவைச் சட்டத்தின் பிரிவு 431 இனைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பின்வருமாறு -

(அ) இருபத்தொன்பதாம் பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட கைப்பற்றப்பட்ட ஆதனத்திற்கான அல்லது களவாடப்பட்ட ஆதனத்திற்கு அவருடைய கோரிக்கையினை நிலைநாட்டுவதற்கு ஆளொருவருக்கு அளிக்கப்பட்ட காலப்பகுதியினை குறைப்பதற்கு ஏற்பாடுசெய்கின்றது ;

(ஆ) அப்பிரிவின்கீழ் எதற்கு அறிவித்தல் தேவைப்படுகின்றதோ அதற்கு ஆதனத்தின் பெறுமதியினை அதிகரிப்பதற்கும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 432 இனைத் திருத்துகின்றதென்பதுடன் அப்பிரிவின் ஓரக்குறிப்பிற்கான விளைவாந்தன்மையினதான திருத்தத்தினையும் ஏற்பாடு செய்கின்றது.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
(திருத்தம்)

ச. வ. ஓ. 44/2015

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சட்டத்தின் 431 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 431 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஆறு மாதங்களுக்குள்ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டு மாதங்களுக்குள்ளாக" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவாக அல்லது அதற்கு மேற்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இருபத்தையாயிரம் ரூபாவாக அல்லது அதற்கு மேற்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 432 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 432 ஆம் பிரிவானது அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"இரண்டு மாதங்களுக்குள்ளாக கோரிக்கையாளர் எவரும் தோன்றாவிடத்து பின்பற்றப்படும் நடவடிக்கைமுறை".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2-PL 009775 -425 (2016/02)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்